**செய்தி வெளியீடு எண்: 127** **நாள்: 16.02.2012**

## பத்திரிக்கைச் செய்தி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி நெல் கொள்முதல் பொது விநியோகத் திட்டம், ஆகிய திட்டங்களின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம், சென்னை தலைமைச் செயலகத்தில் 16.02.2011 காலை மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் இரா.காமராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. உணவுத்துறை அமைச்சர் தனது உரையில் குறிப்பிட்டாவது தமிழக முதல்வர் அவர்கள், விவசாயிகளின் நலன் கருதி எடுத்த நடவடிக்கைகளினால் வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்வாக ஜூன் 6 ஆம் தேதியே மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விட உத்தரவிட்டதால், கடந்த 10 வருடங்களில் இல்லாத சாதனையாக, நடப்பு கொள்முதல் பருவத்தில் 1451 நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, இதுவரை 11.09 இலட்சம் மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. செப்டம்பர் 2012 உடன் முடிவடையும் கொள்முதல் பருவத்தில் 26 இலட்சம் மெ.டன் நெல் கொள்முதல் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. குருவை பருவத்தில் மட்டும் 5.24 இலட்சம் மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டதும் ஒரு சாதனையாகும். விவசாயிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஊக்கத்தொகையாக சன்னரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.70/—ம் சாதாரக நெல்லுக்கு ரூ.50/—ம் வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டதன் பயனாக இதுவரை கொள்முதல் செய்யப்பட்டுள்ள நெல்லுக்கு ரூ.67.84 கோடி ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகள் கொண்டு வரும் நெல் உடனுக்குடன் கொள்முதல் செய்யப் போதுமான கொள்முதல் முன்பணம், சாக்குகள் தயாராக உள்ளன என்றும், நிலையத்தில் உள்ள நெல் தூற்றும் இயந்திரங்களை விவசாயிகள் இலவசமாக உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்றும் விவாசயிகளின், தேவைக்கேற்ப மேலும் 400 நெல் தூற்றும் எந்திரங்கள் புதிதாக வாங்குவதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் எனவும் அமைச்சர் கூறினார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையின்படி, குடிமைப் பொருள் கடத்தல் தடுப்பு காவல் துறை அலுவலர்களின் தொடர் நடவடிக்கையினால் 149 நபர்கள் தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு கடத்தல் நடவடிக்கைகள் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. நியாயவிலைக் கடைகளில் பொது விநியோகத் திட்ட மற்றும் சிறப்பு பொது விநியோகத் திட்டங்கள் மூலம் வழங்கப்படும் பொருட்கள் குடும்ப அட்டைதாரர்களுக்கு முறையாக விநியோகம் செய்யப்படுவது கண்காணிக்கப்படுகிறது. துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில், ஆட்டா முதலான சிறப்பு பொது விநியோகத் திட்ட பொருட்கள் ஆகியன மாத இறுதியில் விடுபட்டுப் போனவர்களுக்கு, பதிவேட்டில் பதிவு செய்து மறுமாதம் முன்னுரிமை அடிப்படையில் அவர்களுக்கு வழங்க அறிவுரைகள் வழங்கப்பட்டு அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொருட்கள் கிடைப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

31.12.2011 தேதியில் புழக்கத்தில் உள்ள 1,97,70,682 குடும்ப அட்டைகளை மேலும் ஓராண்டுக்குப் புதுப்பிக்கும் பணி 01.01.2012 முதல் நடைபெற்று வருகிறது. 12.02.2012 வரை 1,77,18,574 குடும்ப அட்டைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. 28.02.2012 வரை இப்பணி நடைபெற உள்ளது.

மாவட்ட வழங்கல் அலுவலர்கள்/உதவி ஆணையாளர்கள் ஆணையாளரின் மாத ஒதுக்கீடு உத்தரவு பெறப்பட்ட பின் காலதாமதமின்றி உப ஒதுக்கீடுகளை தாலுகா வாரியாகப் பிரித்து உத்திரவிடவேண்டும். ஒவ்வொரு மாதமும் முதல் தேதியில் அனைத்து பொருட்களும் இருப்பில் வைக்கும் வண்ணம் முந்தைய மாதத்தின் இறுதிக்குள் 60% முன் நகர்வு செய்வது உறுதி செய்யப்பட வேண்டுமெனவும் அதிகாரிகளுக்கு மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் இரா. காமராஜ் அவர்கள் அறிவுறுத்தினார்.

தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத்தில் அத்தியாவசியப் பொருட்கள் இருப்பு வைப்பதற்கென 6.42 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு உள்ள கிடங்குகள் தற்போது உள்ளன. இந்த கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் மதுராந்தகம், சின்னசேலம், கோவில்பட்டி, காரைக்குடி, அருப்புக்கோட்டை ஆகிய ஐந்து இடங்களில் 45,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட ஒன்பது கிடங்குகளை கட்டுவதற்கு ஆணையிட்டுள்ளார்கள் என்றும் ஆய்வின்போது உணவுத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

நியாய விலைக் கடைகளில் அரிசியின் தரம் குறைந்து காணப்பட்டால் அந்த அரிசியை அங்காடியிலிருந்து திரும்ப எடுத்துக் கொண்டு கிடங்கிலிருந்து நல்ல தரமான அரிசியைக் கொடுத்து விநியோகம் சீரான முறையில் நடைபெறுவதை உறுதி செய்ய வேண்டுமெனவும், இந்தியாவிலேயே விலையில்லா அரிசி வழங்குகின்ற ஒரே மாநிலமாக உள்ள தமிழ்நாட்டில் நுகர்வோரின் நலன் காக்க உறுதி பூண்டு 1.97 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு உணவுப் பாதுகாப்பு வழங்கி வருகின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி உணவுத் துறையின் செயல்பாடுகள் மிகச் சிறப்பாக நடைபெறும் வகையில் அனைத்து அலுவலர்களும் பணியாற்ற வேண்டுமெனவும் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் இரா. காமராஜ் அவர்கள் கூறினார்.

இக்கூட்டத்தில் அரசு உணவு, கூட்டுறவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை செயலாளர் திருமதி M.P. நிர்மலா, குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையர் திரு P.M.பஷீர் அகமது, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக நிர்வாக இயக்குனர் முனைவர் தா. கார்த்திகேயன், தமிழ்நாடு சேமிப்பு கிடங்குகள் நிறுவன நிர்வாக இயக்குனர் திரு எம். கலைவாணன், குடிமைப்பொருள் கடத்தல் தடுப்பு காவல்துறை கண்காணிப்பாளர் மற்றும் உணவுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: –**

**இயக்குநர்,** செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.